# A.D.J.DHARMAMBAL POLYTECHNIC COLLEGE
## NAGAPATTINAM - 611 001.
(A GOVERNMENT AIDED INSTITUTION)

# சிலையும் சிற்பியும் நீ



**Date :**
**17 10.2022**
**&**
**18.10.2022**

**நாகப்பட்டினத்தில்**
**முதன் முறையாக**
**அரசு பள்ளி**
**மாணவர்களுக்கான**
**தன்னம்பிக்கை**
**மற்றும் பொதுத் தேர்வு**
**வழிகாட்டும் நிகழ்ச்சி**

இடம்

**கல்லூரி கலையரங்கம்**

**ADJD பாலிடெக்னிக் கல்லூரி, நாகூர் ரோடு, நாகப்பட்டினம்.**

**04365 248161, 248820 +91 9943234790, 8778501559, 8248398789**

# ADJ தர்மாம்பாள் பாலிடெக்னிக் கல்லூரி,

(அரசு உதவி பெறும் இருபாலர் பயிலகம்)

நாகூர் ரோடு, காடம்பாடி, நாகப்பட்டினம் - 611 001

# 40 ஆண்டுகளுக்கும் மேலாக தரமான கல்விச் சேவையில்



**அரசு உதவி பெறும் Dip - Engg பாடப்பிரிவுகள்**

- எலக்ட்ரானிக்ஸ் & கம்யூனிகேஷன் (DECE)
- இன்ஸ்ட்ருமெண்ட்டேஷன் & கன்ட்ரோல் (DICE)
- கம்ப்யூட்டர் (DICE)

**சுயநிதிப்பிரிவு Dip - Engg பாடப்பிரிவுகள்**

- எலக்ட்ரிக்கல் (DEEE)
- மெக்கானிக்கல் (DME)

- தமிழ்நாட்டிலேயே மிகக்குறைவான கல்வி கட்டணம்.
- தரமான கல்வியை வழங்கிட தனிக்கவனம் செலுத்திடும் அரசு உதவிபெறும் கல்வி நிறுவனம்
- சிறப்பு மிக்க அனுபவம் வாய்ந்த பேராசிரியர்கள்.
- அரசின் அனைத்து சலுகைகளையும் பெற்று தரும் கல்வி நிறுவனம்.
- இறுதியாண்டு முடித்திடும் அனைத்து மாணவ/மாணவியற்கும் உயர்தரமான நிறுவனங்களில் (ASHOK LEYLAND, SPIC Ltd, HITACHI COMPANY, LUCAS TVS, HCL SERVICES, TECH MAHINDRA) வேலைவாய்ப்பினை பெற்று தரும் கல்வி நிறுவனம்.

**கல்வித் தகுதி**

10th Pass/+1/+2 Fail முதலாம் ஆண்டிலும்
12th Pass மற்றும் I.T.I Pass 2 வருடம்
நேரடிச்சேர்க்கை
இரண்டாம் ஆண்டிலும்
சேர்த்துக்கொள்ளபடுவார்கள்.



# ஒரு நிமிடம் சிந்தியுங்கள்

**நீங்கள் 18/19 வயதுக்குள் நல்ல நிறுவனத்தில் ரூ.20,000 வரை சம்பளம் பெற வேண்டுமா?**

## ADJ தர்மாம்பாள் பாலிடெக்னிக்ல படிங்க

**10th** முடித்தவர்கள் முதலாமாண்டிலும்

முடித்தவர்கள் நேரடியாக இரண்டாமாண்டிலும் **12th/ITI**

**மேலும் Diploma முடித்தவர் B.E படிக்க வேண்டுமானலும் நேரடியாக இரண்டாமாண்டிலும் சேரலாம். இல்லையெனில் வேலையிலிருந்து கொண்டே Part Time-ல் B.E படிக்கலாம்**

**டிப்ளோமா படித்து விட்டு வேலையில்லாதவர் ஒருவரை உங்களால் காட்ட முடியுமா?**

அரசு துறைகளிலும் ஏராளமான வேலை வாய்ப்புகள்
சுயதொழில் செய்யவும் வாய்ப்பு உள்ளது !
டிப்ளோமா படித்தால் உலகமே உங்கள் கையில்...

# சரியான முடிவை எடுங்கள்...

**உடனே ADJ தர்மாம்பாள் பாலிடெக்னிக் கல்லூரியில் சேர்ந்து பலன் பெறுங்கள்**

EXCELLENCE IN TECHNICAL EDUCATION

# A.D.J.தர்மாம்பாள் பாலிடெக்னிக் காலேஜ்,

(A Government aided Co-Educational Institution & Affiliated to DOTE)

**நாகூர் ரோடு, காடம்பாடி, நாகப்பட்டினம்- 611 001.**

# சிலையும் நீ சிற்பியும் நீ

## நாகப்பட்டினத்தில் முதன்முறையாக அரசு பள்ளி மாணவர்களுக்கான தன்னம்பிக்கை மற்றும் பொதுத்தேர்வு வழிகாட்டும் நிகழ்ச்சி

நாள்;

**17.10.2022 & 18.10.2022**

இடம்:

**கல்லூரி கலையரங்கம்,**
**ADJD பாலிடெக்னிக் கல்லூரி,**
**நாகூர் ரோடு, காடம்பாடி, நாகப்பட்டினம்.**

## "கல்வி என்பது நமது அறியாமையினை வெளிக்கொணரும் ஒரு கருவி''

"கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவருற்கு
மாடு அல்ல மற்றை யவை."

முனைவர் **மு.வரதராசன் உரை:**

ஒருவனுக்கு அழிவு இல்லாத சிறந்த செல்வம் கல்வியே ஆகும், கல்வியை தவிர மற்ற பொருள்கள் (அத்தகைய சிறப்புடைய) செல்வம் அல்ல.

நமது வாழ்நாள் முழுவதும் நம்மை நாமே தயார்படுத்திக் கொண்டு புத்துயிர் பெற்று தனிப்பட்ட முறையில் பயிற்சி பெறுவதற் கான நோக்கமே கல்வி என்பதாகும். கல்வி என்பது தேர்வில் வெற்றி பெற்று, ஒரு காகிதத்திலான பட்டம் பெறுவது என்பது பலரது தவறான எண்ணமாகும். மாறாக அது மனிதன் சிந்திக்கவும், பகுப்பாய்வு செய்வதற்குமான மனப்பயிற்சியாகும். கல்வியானது ஒருவரை தவறிலிருந்து சரி, தீமையிலிருந்து நன்மை, பொய்யிலிருந்து உண்மை மற்றும் நாத்திகத்திலிருந்து ஆத்திகத்தினை வேறுபடுத்திப் பார்க்கக்கூடிய ஒரு பண்புள்ள மனிதராக மாற்றுகின்ற ஒன்றாக இருக்க வேண்டும்.

கல்வியின் நோக்கம் என்பது என்ன நினைக்க வேண்டும் என்பதனைவிட எப்படி சிந்திக்க வேண்டும் என்று கற்பிப்பதாக இருக்க வேண்டும். நமது மறைந்திருக்கும் திறன்களை வளர்த்துக் கொள் வதற்கானது கல்வியாகும். நாம் ஒவ்வொருவரிடமும் ஒரு தனிப்பட்ட நம்பிக்கை, எண்ணம் மற்றும் கனவு உள்ளது. அதனை உணர்ந்து செயல்படுத்தும் பொழுது, அது நம்மை சுற்றியுள்ள சமுதாயம் மற்றும் ஒட்டுமொத்த தேசத்திற்கும் பலன் அளிக்கின்றது.

தினமும் வீட்டு வாசலில் பேருந்தில் ஏறி கல்லூரிக்கு சென்று கல்வி கற்பவர்கள் வெறும் புத்தகப் புழுவாக வெளியுலகம் பற்றி எதுவுமே தெரியாமல் கல்வி கற்பவர்களை கூண்டுகிளி போன்றவர்கள் அல்லது பிராய்லர் கோழி போன்றவர்கள் என்பர். இது போன்று இல்லாமல் அரசு பேருந்து மற்றும் புகை வண்டி ஆகியவற்றில் பயணிப்பவர்கள், அரசு பள்ளிகளில் கல்வி கற்க செல்பவர்கள், அரசு

மருத்துவமனை, அரசு அலுவலகங்கள் குறிப்பாக ரேசன் கடைகள் போன்றவற்றிற்கு சென்று வருபவர்கள் பல நிலையிலும் மக்களோடு தொடர்பில் இருக்கிறார்கள். இவர்கள் பலவிதமான அனுபவங்களை பெறும் வாய்ப்பினை பெறுகின்றனர். இதுபோன்ற மாணவர்களே நமது சமுதாயத்திற்கு தேவையானவர்கள். மதிப்பெண் பெறுவதற்கு மட்டுமே பயிற்சி எடுத்து அதிக மதிப்பெண் பெரும் இயந்திரமாக இல்லாமல், தனித்துவம் பெற்ற சாதிக்கப் பிறந்த மாணவர்களின் தனிப்பட்ட திறன்களை கண்டறிந்து அவர்களை ஒரு சிறந்த T-learners ஆக உருவாக்குவதே எங்கள் கல்லூரியின் நோக்கமாகும்.

அதாவது T-ல் உள்ள செங்குத்து பகுதியான I-போன்று மாணவர்களை அவர்களது படிப்புப் பிரிவில் மிகமிக ஆழமாகவும், நுணுக்கமாகவும் கற்றிட செய்வதும், T-ல் உள்ள கிடைமட்ட பகுதியான - போன்று மிக விரிவாக அவர்களுடைய திறனுக்கு ஏற்ப மற்ற பல்வேறு துறைகளில் அவர்களுடைய திறனினை வளர்ப்பதே எங்கள் கல்லூரியின் நோக்கமாகும். பாடங்களை புரிந்து கொண்டு செயல் முறையோடு படிக்கின்ற பாலிடெக்னிக் கல்வி என்பது மிகவும் எளிதான, இனிதான, இயல்பான படிப்பாகும். இதில் சிறந்த நிறுவனங்களில் வேலைவாய்ப்புகள், பட்டப் படிப்பினைவிட அதிகமாகும். தொழில் முனைவோருக்கான வாய்ப்புகள் பாலிடெக்னிக் மாணவர்களுக்கு பல துறைகளில் சிறந்து விளங்குகின்றன. மேலும் மேற்படிப்பு என்பது எளிதாக அமைகின்றது.

“**மாணவர்களால் ஆசிரியர்கள், மாணவர்களுக்காகவே ஆசிரியர்கள்**”என்று வெற்றியாளர்களின் சங்கமமான **A.D.J. தர்மாம்பாள் பாலிடெக்னிக் கல்லூரிக்கு** தங்களை வரவேற்பதில் மிக்க மகிழ்ச்சி அடைகின்றோம்.

Dr. G. SENTHILKUMAR, **M.E.,Ph.D.,**
Principal,
A.D.J. Dharmambal Polytechnic College,
(A Government aided Co-Educational Institution & Affiliated to DOTE)
Nagore Road, Kadambadi, Nagapattinam - 611 001.



# தேர்வில் நூற்றுக்கு நூறு மதிப்பெண் பெறப் பத்து வழிகள்

மாணவர்கள், தேர்வுகளில் அதிக மதிப்பெண்கள் பெறுவதற்கு மட்டுமல்லாது, சிறப்பாகக் கற்றுக்கொள்ளவும் உதவும், நுணுக்கமான வழிகள் “Accelerated Learning Techniques” என்று அழைக்கப்பெறுகின்றன. அதில், லட்சக்கணக்கான மாணவர்களுக்கு கற்பித்த என் அனுபவத்தில், சிறந்த பத்து வழிமுறைகளை, மாணவர்கள் பழகிப் பயன்பெறுவதற்காக அளிக்கிறேன்.

## 1. கேள்வி கேளுங்கள் (Ask questions)

பொதுவாகவே, கேள்வி நம் அறிவைப் பெருக்கும். விமானத்தைக் கண்டுபிடித்தவர்கள் ரைட் சகோதரர்கள் என்று தெரியும் நமக்கு, அந்த இருவரின் முழுப்பெயரும் தெரியவில்லை. காரணம் இதுவரை நாம் யாரிடமும் இதைக் கேட்டதில்லை. கேட்டால்தான் எதுவுமே கிடைக்கும் என்பதை நாம் உணர வேண்டும். இதையே பைபிள், “கேளுங்கள் – தரப்படும்...!” என்று நமக்கு உணர்த்துகிறது.

மதிப்பெண்கள் அதிகரிக்க, நான் மனிதர்களைக் கூடக் கேட்கச் சொல்லவில்லை. உங்களின் பாடப் புத்தகங்களைக் கேட்கச் சொல்கிறேன். “புத்தகங்கள் தானே எங்களைக் கேள்வி கேட்கும். நாங்கள் எப்படி..?” என்று யோசிக்காதீர்கள். அதில்தான் Technique அடங்கியுள்ளது. முதலில், ஒரு பாடத்தைப் படியுங்கள். பிறகு, அதில் எவ்வாறெல்லாம் கேள்விகள் கேட்கலாம் என்று யோசித்துப் பாருங்கள். அந்தக் கேள்விகளை ஒரு நோட்டில் குறித்து வையுங்கள். இப்போது, அந்த கேள்விகளை மனதில் கொண்டு, மீண்டும் ஒரு முறை பாடத்தைப் படியுங்கள். புத்தகத்தில் விடைகள் காட்சி தரும்.

## 2. குறிப்பு எடுங்கள் (Take Notes)

குறிப்பு எடுப்பது என்றவுடன், ஆசிரியர் போர்டில் எழுதுவதைப் பார்த்து, நோட்டில் எழுதுவதைச் சொல்வதாகப் புரிந்து கொள்ளாதீர்கள். அதற்குப் பெயர் காப்பி அடிப்பது. ஆசிரியர் பாடம் நடத்தும் போது தரும் விளக்கங்களை, மாணவர்கள் தங்களுக்குப் புரியும் வகையில் சின்ன சின்ன வார்த்தைகளாகக் குறித்து கொள்வதே, குறிப்பு எடுத்தல் ஆகும். இந்தக் குறிப்புகள், மற்றவர்களுக்குப் புரியும் வகையிலோ, முழுமையான வாக்கியங்களாகவோ இருப்பது அவசியமில்லை எழுதிய மாணவனுக்கு மட்டும் புரிந்தால் போதும்.

குறிப்பு எடுத்தல் குறித்து வெளிநாடுகளில் தனி வகுப்புகளே எடுக்கிறார்கள். அவ்வளவு முக்கியமான விஷயம் இது. ஒரு சிறந்த ஆசிரியர் முறையாக கற்பிக்கும் போது ஒழுங்காகக் கவனித்து தெளிவாகக் குறிப்புகள் எழுதிவிட்டால், பல மணி நேரம் படிக்கவே அவசியம் இருக்காது. முழுப் பாடத்தையும் மீண்டும் மீண்டும் படிக்கத் தேவையில்லை. அந்த குறிப்புகளை மட்டும் அடிக்கடி திரும்ப வாசித்தாலே முழுபாடமும் நினைவுக்கு வந்துவிடும்.

### 3. புரிந்து கொள்ளுங்கள் (Understand)

ஒரே ஆசிரியரிடம் பயிலும் மாணவர்கள் வெவ்வேறு மதிப்பெண்கள் எடுப்பதற்கு முக்கியக் காரணம் அவரவர் புரிந்து கொள்ளும் விதத்தால் தான். எப்படிப் படிக்கிறோம் என்பதை விட, எப்படி புரிந்து கொள்கிறோம் என்பதே முக்கியமானது. அதனால்தான் ஒரே நேரத்தில் திருக்குறளுக்கு நூற்றுக்கணக்கான விளக்க உரைகள் வெளிவந்து கொண்டே இருக்கிறது.

### 4. மகிழ்ச்சி காணுங்கள் (Develop Interest & Fun)

வாழ்க்கையை மகிழ்ச்சியாக வாழ இரண்டு வழிகள்தான். ஒன்று பிடித்ததைச் செய்வது மற்றொன்று, செய்வதை பிடித்ததாக மாற்றிக்கொள்வது. படித்துத்தான் ஆக வேண்டும். பிடிக்கவில்லை என்று சொல்லிப் பயனில்லை. எனவே, படிப்பை நமக்குப் பிடித்தவகையில் மாற்றிக் கொண்டுவிட்டால், பிறகு கவலையே இல்லை. அது எப்படி மாற்றுவது...? ஒருவழி... விளையாட்டு...! உங்கள் பாடங்களை வைத்துப் புதிய புதிய விளையாட்டுகளை, புதிர்களை உருவாக்குங்கள் பாடத்தின் மீது ஆர்வம் அதிகரிக்கும் மாணவர்கள் அனைவரும் அறிந்த "புத்தகத்தின் பக்க எண்களைக் கொண்டு விளையாடும் கிரிக்கெட் ஒரு நல்ல உதாரணம்".

அதே போல், உங்கள் நண்பரிடம், பாடப் புத்தகத்தைக் கொடுத்து அதில் ஏதாவது ஒரு பக்கத்தின் எண்ணை சொல்லச் சொல்லுங்கள். அந்த பக்கத்தில் எந்த பாடம், எந்த பகுதி வரும் என்பதை நீங்கள் யூகித்து சொல்ல முயற்சி செய்யுங்கள் இப்படி தொடர்ந்து விளையாடினால், ஒரு காலகட்டத்தில் பாடப் புத்தகம் முழுதும் உங்கள் மனக்கண்ணில் தோன்றத் தொடங்கிவிடும். பிறகென்ன...? மதிப்பெண்கள் அதிகரிக்கும். சுலபம்தானே...? இன்னொரு உத்தி... கணக்கில் புதிய பார்முலாக்களை நீங்களே கண்டுபிடிக்கலாம். ஏதேனும் ஒரு எண்ணை இன்னொரு எண்ணுடன் பெருக்கி விடையை வைத்துக்கொள்ளுங்கள். இப்போது, வேறு ஏதேனும் புதிய முறையில் அதே விடையைக் கொண்டுவர முடியுமா என்று பல வழிகளில் முயன்று பாருங்கள். கண்டுபிடித்த புதிய வழிமுறை, சரியானதா என்பதைப் பல எண்களுடன் பெருக்கி சோதித்து பாருங்கள். கணக்கில் ஆர்வம் அதிகரிக்கும் எளிதாகப் புரியும்.

### 5. ஐம்புலன்களையும் பயன்படுத்துங்கள் (Involve More Senses)

படிப்பது என்பது எப்போதும் போர் (Bore) அடிக்கும் விஷயமாகவே இருக்கிறது. ஏன் தெரியுமா...? படிக்கும் போது, கண்களுக்கு மட்டுமே வேலை கொடுக்கிறோம். மற்ற உறுப்புகள் சும்மா இருப்பதால் போர் அடிக்கிறது. மேலும், ஒரே உறுப்புக்கு அதிக வேலை கொடுப்பதால், சீக்கிரமே சோர்வு அடைகிறோம். எனவே, ஐம்புலன்களில் முடிந்தவரை இரண்டு, மூன்று உறுப்புகளையாவது பயன்படுத்த முயற்சி செய்யுங்கள்.

பாடங்களை பாடமாக மாற்றிப் பார்ப்பது, இசையாக்கிக் கேட்பது, விளையாட்டு போன்ற செயல்களாக மாற்றிச் செய்வது போன்ற பல வழிகளில் இதைச் செய்யலாம். ஆனால், யார் எந்த வழியைப் பின்பற்ற வேண்டும் என்பது நீங்கள் கற்கும் வழிமுறையைப் (Learning Style) பொறுத்தது. நீங்கள் எந்த முறையில் அதிகமாக கற்கிறீர்கள் என்பதைக் கண்டுபிடிக்கும் வழியை, அடுத்த தலைப்பில் பார்ப்போம்.

## 6. கற்கும் வழிமுறையைக் கண்டுபிடியுங்கள்:
(Plan Your Learning Style)

பொதுவாக நாம் அனைவரும் மூன்று வழிகளில் கற்றுக்கொள்கிறோம். அதை பார்த்துக் கற்பது (Visual), கேட்டுக் கற்பது (Auditory) மற்றும் செய்து கற்பது (Kinesthetic) ஆகியன ஆகும். ஒரு ஆய்வின்படி, மனிதர்கள் 65 சதவீதம் பேர் பார்த்துக் கற்கும் திறன் மேம்பட்டவர்களாகவும், 30 சதவீதம் பேர் கேட்டுக் கற்கும் திறன் மிகுதியானவர்களாகவும், 5 சதவீதம் பேர் செய்து கற்கும் திறன் அதிகமாக உடையவர்களாகவும் கணிக்கப்பட்டுள்ளனர். இதில் நீங்கள் எந்த திறன் அதிகமாக உடையவர் என்பதைக் கண்டு பிடியுங்கள். அதற்கேற்ப நீங்கள் படிக்கும் முறையை வடிவமைத்துக் கொள்ளுங்கள்.

உதாரணமாக, நீங்கள் பார்த்துக் கற்கும் திறன் அதிகமுடையவர் எனில், பாடக்கருத்துகளைப் பாடங்களாக (Mind Map) வரைந்து வைத்து அதை அடிக்கடி பார்ப்பதின் மூலம் பலனடையலாம். கேட்பதால் கற்கும் திறன் அதிகமுடையவர் எனில், பாடங்களை ஒரு முறை சத்தமாக படித்து அவற்றை ஏதேனும் ஒலிக்கருவியில் (Tape, I Pad or Mobile) ரெகார்ட் செய்து வைத்துக் கொண்டு அடிக்கடி கேட்கலாம். செய்து கற்கும் திறன் அதிகமுடையவர்கள் எழுதிப் பார்ப்பது, பாடங்களைப் பயன்படுத்தி விளையாடுவது போன்றவற்றின் மூலம் பயன் பெறலாம்.

## 7. பிரைம் டைமில் அதிகம் படியுங்கள்
(Read more on Prime Time)

பொதுவாக காலை 4 மணி முதல் 6 மணி வரையிலான நேரத்தில், காற்று தூய்மையானதாக ஆக்ஸிஜன் மிகுந்ததாக இருக்கும். அதனால் இரத்த ஓட்டம் நன்றாக இருந்து மூளை சுறுசுறுப்பாக இருக்கும் என்பதால், படிப்பதற்கு மிகவும் உகந்த நேரம். ஆனால், சிலருக்கு இரவில் படிப்பதுதான் வழக்கமாக இருக்கும். பரவாயில்லை. வேறு யாருக்காகவும் இல்லாமல் உங்களுக்காகப் படித்தீர்கள் என்றால் எந்த நேரத்திலும் படிக்கலாம் ஒரு நாளை இரண்டு, இரண்டு மணி நேரமாகப் பிரித்துக் கொள்ளுங்கள். இதில் எந்த நேரத்தில் படித்தால் உங்களுக்கு சுலபமாக



மனப்பாடம் ஆகிறது அல்லது புரிகிது என்று நம்புகிறீர்களோ, அதுவே உங்கள் பிரைம் டைம். உங்கள் பிரைம் டைமில் கடினமாகத் தோன்றும் பாடங்களை அல்லது அதிக சுமையுள்ள பாடங்களை படியுங்கள்.

## 8. தொடர்புபடுத்தி படியுங்கள்
(Relate Unknown to Known)

உங்களுக்கு தெரியாத ஒன்றைத் தெரிந்த ஒன்றோடு தொடர்புபடுத்தி படித்தால் சுலபமாகப் புரியும். எளிதில் மனதில் பதியும். உதாரணமாக நம் கழுத்தின் நடுவில் சிறிய கட்டி போன்று உள்ள அமைப்பை, வழக்கு மொழியில் சங்கு என்கிறோம். அதற்கான, ஆங்கில் வார்த்தை “Adam’s Apple” என்பதாகும். இதை மனப்பாடம் செய்யாமல் நாம் அறிந்த ஆதாம் ஏவாள் கதையுடன் தொடர்புபடுத்திப் படித்தால் வாழ்நாள் முழுவதும் மறக்காது.

எதோடு தொடர்புபடுத்துகிறீர்கள் என்பதை விட, எப்படித் தொடர்புபடுத்தி நினைவில் பதிய வைக்கிறீர்கள் என்பதே முக்கியம்.நமக்கு அதிகம் அறிமுகமில்லாத ஒரு நபரை அவரின் சாயலில் இருக்கும் ஒரு பிரபலமான நபரை வைத்து நினைவில் கொள்வதைப் போலதான் இந்த முறையும்.

## 9) தொகுத்து கொள்ளுங்கள் (Organize Information)

மாணவர்களை, தாங்கள் படிக்கும் பெரிய வினாக்களுக்கான விடைகளின் முக்கிய விவரங்களை வரிசைப்படுத்தி ஒரு சிறிய நோட்டில் எழுதி வைத்திருந்தால் தேர்வு நாளின் காலையில் விரைவாகத் திருப்பி பார்த்து நினைவு கூறுவதற்கு வசதியாக இருக்கும். இவ்வாறு செய்திகளை முறைப்படித் தொகுத்துக் கொண்டால் நினைவுச் சங்கிலி அறுபடாமல் தொடர்ச்சியாக முழுமையான விடையையும் ஒரு செய்தி கூட விடு படாமல் எழுத முடியும். இடையில் வரும் ஒரு வரியிலிருந்து பாடும் போது நினைவுக்கு வராத சில திரைப்பட பாடல்களை, முதல் வரியிலிருந்து பாடினால் முழுமையாக நினைவுக்கு வருவது போல, இந்த தொகுத்து வைத்துக்கொள்ளும் முறையும் உதவும். பெரியவினாக்கள் மட்டுமல்லாமல், பாடம் முழுமைக்கும் கூட இந்த முறையைப் பயன்படுத்தலாம்.

**10) சொல்லி கொடுங்கள்** (Teach someone else)

குறிப்பிட்ட பாடப்பகுதியினைப் படிக்க, புரிந்து கொள்ள கஷ்டப்படும் உங்கள் சக மாணவர் ஒருவருக்காவது சொல்லிக் கொடுங்கள். மற்றவர்களுக்குப் பாடம் நடத்துவதால் இரண்டு நன்மைகள் உண்டு. ஒன்று, தெரிந்த பாடப்பகுதி மீண்டும் நினைவு கூறப்படும். அதனால் அப்பகுதி நமக்கு மேலும் வலுவாக மனதில் பதியும். இரண்டாவது, மற்றவருக்கு சொல்லிக்கொடுக்க வேண்டும் என்றால் முதலில் நமக்கு அப்பகுதி முழுமையாக தெரிந்திருக்க வேண்டும். இல்லையென்றால் மானம் போய் விடும். அதற்காகவாவது அப்பகுதியை நாம் ஐயமறக் கற்போம்.

மூர்ஷிதாபாத்தின் “பாபர் அலி”, பாட்னாவின் “பாரதி” போன்ற மாணவர்கள், இதுபோல சொல்லிக்கொடுக்க தொடங்கித் தற்போது தம் பகுதியிலுள்ள நூற்றுக்கணக்கான ஏழை மாணவர்கள் பயன்பெறும் வகையில் முறைசாராப் பள்ளியையே நடத்தி வருகின்றனர். அவர்களைப் போல பிறர் நலனுக்காக நாம் சேவை செய்யாவிட்டாலும், நம் சுயநலத்துக்காகவாவது ஒரு பின்தங்கிய மாணவருக்குப் பாடம் கற்பிக்கலாமே...!

**கவி. முருகபாரதி,**
தலைமைப் பயிற்றுநர்,
யோசி மனிதவளப் பயிற்சி நிறுவனம்,
புதுக்கோட்டை.



## தேர்வுக்கு படிக்கும் முறை:

- உங்கள் பாடப்புத்தகங்களையும் நோட்டுப் புத்தகங்களையும் வினாத்தாள்களையும். அனைத்துக் கையேடுகளையும் பாட வாரியாக வரிசைப்படுத்தி தயாராகுங்கள்.
- பாடப்புத்தகங்கள். வினா வங்கிகள், முந்தைய ஆண்டு பொதுத் தேர்வு கேள்வித்தாள்கள், வழிகாட்டி நூல்கள் இவைகளை சேகரித்து படியுங்கள்.
- எல்லாப் பாடங்களுக்கும் உரிய தலைப்புகள், குறிப்புகள். வரைபடங்கள், ஆகியவற்றை சிறிய சிறிய தாள்களில் எழுதி சிறு குறிப்பாக (Short Notes) எடுத்துக் கொள்ளுங்கள்.
- பாடம் படிக்கும்போது வாயைத் திறந்து சத்தம் போட்டுப் படிக்காமல், வாயை மூடி மௌனமாக படியுங்கள். அப்போது, உங்கள் சக்தி விரைவில் வீணாகாது. அவற்றை பல முறை எழுதிப் பயிற்சி செய்யுங்கள். எழுத்துப் பிழை வருவதைத் தவிர்க்க, கடினமானச் சொற்கள் ஒவ்வொன்றையும் திரும்பத் திரும்ப எழுதிப் பாருங்கள்.
- ஒவ்வொரு பாடத்தின் இறுதியிலும் கொடுக்கப்பட்டுள்ள தன் மதிப்பீட்டு வினாக்களை கவனமுடன் படித்தால் அதிக மதிப்பெண் பெறுவது நிச்சயம். எனவே அதனை உடனடியாக பொறுப்புணர்ந்து செய்யுங்கள். பாடத்தைக் குறித்தோ, அந்தப் பாடத்தின் தேர்வைக் குறித்தோ சந்தேகம் இருந்தால் அந்தந்த பொறுப்பாசிரியரை அணுகித் தேர்வுக்கு முன்பு தெளிவைப் பெற்றிடுங்கள்.
- நல்லொழுக்கம், நற்சிந்தனை இயல்பாக அமைதல் வேண்டும். படிப்புத் தவிர மற்ற எவற்றிலும் – சினிமா, தீயப் பழக்கங்கள், தொலைக்காட்சித் தொடர்கள், வானொலி, சினிமாப் பாடல்கள், முக்கியமாக கிரிக்கெட் போன்றவற்றை சிறிது காலத்திற்குத் தயவு செய்து மறந்து அதில் கவனம் செலுத்தாதிருங்கள். செல்போன் பயன்படுத்துவதை அறவே தவிர்த்திடுங்கள்.

- காரணம் பொதுத் தேர்வு மீண்டும் மீண்டும் வராது.கஷ்டமான, முக்கியமான பதில்களைப் படிக்கும்போது Key Word-ஐ பென்சிலால் அடையாளம் செய்து படியுங்கள், இவை நினைவுக்கு கொண்டுவர பயன்படும்.
- அறிவியல் பாடத்தில் விதிகள், சூத்திரங்கள். மூலக் கூறுகள். படங்கள் போன்றவற்றை திரும்பத் திரும்ப மனதில் கொண்டு வருதல் அவசியம்.
- உங்கள் மூளை சுறுசுறுப்புடன் செயல்படும் காலை நேரங்களில் கடினமான பாடத்தையும் மற்ற நேரங்களில் பிற பகுதிகளையும் திட்டமிட்டு படியுங்கள்.
- வீட்டில் குறிப்பிட்ட ஒரு இடத்தில் படிப்பது நல்லது. மின் விளக்கின் ஒளி. படிக்கும் புத்தகத்தில் முகத்தின் பின்னால் இருந்து வருவது நல்லது.
- உணவில் அதிகம் எண்ணெய் இல்லாமல், கீரை வகைகள், காய்கறிகள், நார்ச்சத்துள்ள உணவு, பழங்கள் மற்றும் ஆவியில் வேகவைத்த எளிய உணவுகளை சாப்பிடுங்கள்.
- அதிக நேரம் கண் விழித்துப் படிக்காதீர்கள், தேவையான அளவு தூக்கம் அவசியம். டீ, காபியை தவிர்க்கவும். சூடான பால் நல்லது.
- உங்கள் இலக்கு மதிப்பெண்ணை எழுதி சுவரில் ஒட்டி வையுங்கள். பெற்றோர் அல்லது நெருங்கியவர்களிடம் சொல்லி வையுங்கள். அதுவே உங்களை மேலும் படிக்கத் தூண்டும்.
- எல்லாவற்றையும் அரைகுறையாகப் படிப்பதை விட முடிந்த அளவு முழுமையாகப் படிப்பது நல்லது.
- நான் நன்றாகப் படிப்பேன்; நிறைய மதிப்பெண்களைப் பெறுவேன்; என் அன்புப் பெற்றோருக்கும் என் பள்ளிக்கும் நிச்சயம் பெருமை சேர்ப்பேன் என்று உங்களுக்கு நீங்களே அடிக்கடி சொல்லி உங்கள் தன்னம்பிக்கையை வளர்த்துக் கொள்ளுங்கள். எட்டா தூரத்தையும் எட்டிவிடலாம்!



## தேர்வுக்கு முந்தைய இரவில்...

- எல்லாம் காலையில் பார்த்துக் கொள்ளலாம் என்றில்லாமல் தேர்வுக்கு முந்தைய இரவே தேவையான பொருட்களை எடுத்து வைத்துத் தயாராயிருப்பது நல்லது. ஏனெனில் காலையில் பரபரப்பில் பலவற்றை மறக்க வாய்ப்புகள் அதிகம்.
- உங்கள் பள்ளிச் சீருடைகளைச் சரிபார்த்து எடுத்துத் தயாராக வையுங்கள். செல்போன் எடுத்துச் செல்ல வேண்டாம்.
- உங்கள் எழுது பொருட்களை ஒரு முறை சரிபார்த்து எடுத்து வையுங்கள். தேர்வுக்கு பால்பாயின்ட் பேனாவைவிட இங்க் பேனா சிறந்தது. அதற்கென்று தேர்வு நாளன்று புதிய பேனாவை பயன்படுத்த வேண்டாம்.

## தேர்வுக்கு எடுத்துச் செல்ல வேண்டியவை...

- பள்ளி அடையாள அட்டை
- தேர்வு எழுத ஹால் டிக்கெட்
- பஸ் பாஸ்
- கைக்கடிகாரம்
- இரண்டு மை நிரப்பப்பட்ட பேனாக்கள்
- உதவிக்கு ஒரு பால்பாயின்ட் பேனா
- காகித பென்சில் (கூர்மையாக)
- ஓர் ஓரடி ஸ்கேல்
- ஓர் அழிப்பான் (ரப்பர்)
- ஒரு பிளேடு அல்லது ஷார்ப்னர்
- ஒரு ஸ்கெட்ச் பாக்ஸ்
- கலர் பென்சில் பாக்ஸ் தேவைப்பட்டால்
- ஒரு ஜியோமெட்ரிக் பாக்ஸ்

## தேர்வு நாள் அன்று...

- விடியற்காலையில் எழுந்து காலைக் கடனை முடித்துவிட்டு நீராடுங்கள்.
- நல்ல போதுமான காலை உணவு சாப்பிடுங்கள். தேர்வுக்கு முன்பு சாப்பிடாமல் செல்வது விபரீதத்தில் முடியலாம்.
- தேர்வு எழுதப் போகிறோம் என்பதை மறந்துவிடுங்கள். ஒருபோதும் பதற்றப் படாதிருங்கள்.
- மீண்டும் ஒருமுறை நன்றாக சிறு குறிப்புகளைப் படியுங்கள். உங்களுக்கு ஏற்பட்ட சந்தேகங்களிலிருந்து தெளிவடைந்திடுங்கள்.
- எனக்கு எல்லாம் தெரியும்; நான் தேர்வை நன்றாக எழுதுவேன். என்மேல் எனக்கு நம்பிக்கையுண்டு என்று அடிக்கடி சொல்லிக் கொள்ளுங்கள்.
- ஏற்கனவே எடுத்துக்கொள்ள வேண்டிய பொருள் பட்டியலை மீண்டும் ஒருமுறை சரிபார்த்து எடுத்துக்கொண்டு நீங்கள் தயாராகிடுங்கள்.
- உங்களுக்கு பிடித்த. நீங்கள் வணங்கிடும் இறைவனிடம் வேண்டிக் கொள்ளுங்கள். மறந்தும் ஒருபோதும் பதட்டப்படா தீர்கள்.
- தாய்-தந்தையரின் ஆசீரையும் பெரியோரின் வாழ்த்துக்களை யும் மறக்காமல் பெற்றுக்கொண்டு பள்ளிக்கும் வீட்டிற்கும் இடையிலுள்ள தூரம் செல்லும் வழி, வாகனம், போக்குவரத்து இடையூறு ஆகியவற்றை கவனத்தில் கொண்டு தேர்வுக்கு அரைமணி நேரம் முன்பிருக்கும்படி, பள்ளிக்கு புறப்படுங்கள்.
- பள்ளிக்கு செல்லும்போது உங்களது சிந்தனையை, கவனத்தைச் சிதறடிக்கும் வண்ணம் தேவையற்ற பேச்சுக்கு இடங்கொடாதீர்கள். பேருந்தில் பயணம் செய்யும் போதும் சாலையைக் கடக்கும் போதும் மிகுந்த கவனத்தோடும் எச்சரிக்கையோடும் செயல்படுங்கள்; விபத்துக்களைத் தவிர்த்திடுங்கள்



வினாத்தாள் அவுட், அதோ! அந்த கேள்வி வருது. இந்த கணக்கு வருது என்றெல்லாம் பரப்பப்படும் வதந்திகளை ஒருபோதும் நம்பாதிருங்கள். எதுவும் நடக்காதது போல் இயல்பாக தயாராகுங்கள்.

## வினாத்தாள் வாங்கியவுடனே...

- வினாத்தாளை வாங்கிய உடனே உங்களது தேர்வு எண்ணை அதில் எழுதிடுங்கள். வினாத்தாளைக் கவனமுடன் ஒன்று விடாமல் ஐந்து நிமிடங்கள் கவனமாகப் படியுங்கள். அதற்கென்று நீண்ட நேரத்தை அதிலே விரயமாக்காதீர்கள்.
- வினாத்தாளைப் படித்துத் திட்டமிட வேண்டும். உங்களுக்குத் தெரிந்த கேள்விகளைத் தேர்வு செய்து அவற்றை முதன்மைப் படுத்திடுங்கள். வினாத்தாளில் தேர்வு எண் தவிர எதையும் எழுத வேண்டாம்.
- முதல் பக்கத்தில் ஒரு விடையை எழுதிவிட்டு உடனே ஒருபோதும் அடிக்காதீர்கள். அது விடைத்தாள் திருத்துபவரிடம் உங்களைப்பற்றி ஒரு தாழ்வான எண்ணத்தை ஏற்படுத்தும்.
- வினாத்தாளில் ஒரு விடை எழுதி முடித்தவுடன் கோடுபோடவும்; இல்லாவிட்டால் திருத்துபவர் நீங்கள் எழுதிய இரண்டு விடைகளை ஒரே விடையாகக் கருத வாய்ப்புள்ளது. அதற்காகப் பல வண்ணங்களில் கோடுகளைக் கிழிக்க வேண்டாம். அதுவும் குறிப்பாக சிவப்பு, பச்சை, ரோஸ் வண்ணங்களைப் பயன் படுத்த வேண்டாம். நீங்கள் அப்படி அடிக்கோடிடும்போது அதன் அச்சு அடுத்தப் பக்கம் தெரியாதவாறு மேலோட்டமாக இருக்கும்படி பார்த்துக் கொள்ளுங்கள்.

## தேர்வு எழுதும் போது...

- அரை மணி நேரம் முன்னதாகவே தேர்வு அறைக்குச் செல்லுங்கள்.
- குறைந்தது ஒரு மணி நேரத்திற்கு முன்னால் சாப்பிடுங்கள். தேர்வுக்கான உபகரணங்கள், அனுமதிச் சீட்டை மறக்காமல் எடுத்துச் செல்லுங்கள்.
- தேர்வுக்கு முன் படித்தது முழுதும் மறந்தது போல் இருக்கும். இது எல்லோருக்கும் பொதுவானது. பதட்டம் வேண்டாம்.
- கடைசி நிமிட படிப்பு வேண்டாம்.
- அமைதியாக இருக்கையில் அமர்ந்து, மூச்சை இழுத்து விடுங்கள்.
- உங்களுக்கு பிடித்த கடவுளை மனதில் பிரார்த்தனை செய்யுங்கள்.
- தேர்வுத்தாளில் சமய சின்னங்கள் வேண்டாம். பக்தி மனதில் இருந்தால் போதும்.
- மூன்று மணி நேரம் உங்கள் வாழ்வின் முக்கியமான நேரம் என்பதை உணருங்கள்.
- வினாத்தாளை அமைதியாக படித்திடுங்கள். படிக்கும் பொழுதே வினாக்களை தெரிவு செய்யுங்கள்.
- தேர்வு நேரத்தை கணக்கிட்டு அதற்குத் தகுந்த வினாக்களை தேர்ந்தெடுங்கள்.
- குறிப்புகளை இருமுறை படித்துப் பாருங்கள்.
- வினாக்களின் மதிப்பெண் மற்றும் குறிப்பாக எதைக் கேட்டிருக் கிறார்கள் என்பதை தெளிவாகப் புரிந்து கொள்ளுங் கள்,
- தெரியாத வினாக்களுக்கு இறுதியில் நேரம் ஒதுக்குங்கள்.
- நன்றாகத் தெரிந்த வினாக்களுக்கு மட்டும் முதலில் விடையெழுதத் தொடங்குங்கள்.



- வினாக்களுக்கு உரிய எண்ணை சரிபார்த்து எழுதுங்கள். மொத்த நேரத்தை, மதிப்பெண்களுக்குத் தக்கவாறு பங்கிட்டு. அனைத்து வினாக்களுக்கும் பதில் எழுதவும்.
- தெரியும் என்பதற்காக குறைந்த மதிப்பெண் கேள்விக்கு படித்ததையெல்லாம் எழுதவேண்டாம். தேவையானதை மட்டும் எழுதவும்.
- முதல் சில பக்கங்களிலாவது அடித்தல், திருத்தல் இல்லாமல் தெளிவாக எழுதுவது அவசியம். இது திருத்துபவர் மனதில் நல்ல எண்ணத்தை ஏற்படுத்தும்.
- அடித்தல் திருத்தல் இருந்தால் பென்சிலால் அல்லதுபேனாவால் ஒரு கோடிட்டு அடிக்கவும்.
- மிகச் சிறிய எழுத்துக்களில் விடைகளை எழுதாதீர்கள். அது திருத்துபவருக்கு எரிச்சலை ஏற்படுத்தும்.
- அதிக பக்கம் எழுத வேண்டும் என்பதற்காக பெரிய எழுத்திலும் எழுத வேண்டாம்.
- தமிழில் மனப்பாடப்பகுதிகளை எழுதும் போது பா. சீர். அடி ஆகியவைகள் கெட்டுவிடாமல் எழுதுங்கள்.
- விரிவான விடைகளுக்கு உப தலைப்புகள் கொடுத்து பிரித்து எழுதுங்கள்.
- தேர்வு எழுதும்போது மேலும், கீழும் இடம்விட்டு எழுத வேண்டும். மதிப்பெண்கள் போட ஏற்ற வகையில் மார்ஜின் போட வேண்டும்.
- தெளிவான கையெழுத்து ஆசிரியர் மனதில் உங்களைப் பற்றிய மதிப்பை உயர்த்தும்.
- முக்கியக் கருத்துக்களை அடிக்கோடிட்டு காட்டுங்கள். வருவித்தல் போன்ற வினாக்களுக்கு தெளிவான இடம் விட்டு இறுதி சமன்பாட்டை ஒரு கட்டத்திற்குள் இட்டு வையுங்கள்.
- ஒரு வினாவிற்கான விடை முற்றுப் பெற்றவுடன் ஒரு கோடு போட்டு முடித்திடுங்கள்.

- நெருக்கமாக எழுதுவதைத் தவிர்த்திடுங்கள். பக்க எண்களைக் குறியுங்கள்.
- படங்கள், வரைபடங்கள் தெளிவாக வரைந்து குறிப்பிடுங்கள். அழகுபடுத்த நேரத்தை வீணாக்காதீர்கள்.
- குறித்த வினாவிற்கு குறித்த பதிலை சுருக்கமாக எழுதுங்கள். தெரியாத வினாக்களை கடைசியில் சிந்தித்து முடிந்தவரை பதட்டமில்லாமல் எழுதவும்.
- மற்றவர்கள் கூடுதலாக தாள்கள் வாங்குவதைக் கண்டு அஞ்சாமல் உங்கள் எழுத்தில் கவனம் செலுத்துங்கள். நீண்ட பதில் அல்ல சரியான பதிலே தேவை.
- விடைத்தாளில் பக்க எண்ணை சரிபார்க்கவும்.
- ஐந்து நிமிடம் முன்னதாகவே எழுதுவதை நிறுத்தி விட்டு நூலைக் கட்டி, பதிவு எண் முதல், கடைசி விடை வரை சரி பார்க்கவும்.
- விடைகள், கணக்குகள், சூத்திரங்களை சரி பாருங்கள். ஏதாவது எழுதிப்பார்த்து இருந்தால் (Rough Work) அதை அடித்து விடவும்.
- எழுதி முடித்துவிட்டோம் என்பதற்காக முன்னரே வகுப்பை விட்டு வராமல், விடைகளை சரிபார்த்து மேம்படுத்த முயலுங்கள்.

## திறமைசாலிகள் தோற்பதில்லை:

- ஓடும் இரயிலில் செய்தித்தாள்களை விற்றுக்கொண்டு அதில் கிடைக்கும் வருமானத்தில் காலம் தள்ளிக் கொண்டிருந்தான் அந்தச்சிறுவன். இரயில் பெட்டியில் அவன் ஏற்படுத்தி இருந்த ஆராய்ச்சிக் கூடம் விபத்தால் தீப்பற்றிக் கொண்டது. அதனால் அதிகாரிகளிடம் அடி வாங்கியதில் காது கேட்காமலேயே போனது. இது அவரின் ஆராய்ச்சி தாகத்தை அதிகமாக்கியதே தவிர குறையவில்லை. அவரின் தாரக மந்திரம் 99% உழைப்பு 1% உள்ளுணர்வு. மிகக் கடுமையான உழைப்பினால் ஆயிரத்திற்கும் மேற்பட்ட அரிய கண்டுபிடிப்பு களை கண்டுபிடித்தவர்.



- முறையாக பள்ளியில் கல்வி பயிலாத இவரின் அரிய கண்டுபிடிப்புகளில் சில மின்சார விளக்கு, கான்கீரீட் கலவை, ஃபோனாகிராப், பாட்டுப்பாடும் பெட்டி, புரொஜெக்டர், தந்தி, தொலைபேசியில் பேசும் கருவி, பங்குச்சந்தை டிக்கர் கருவி, தானியங்கி வாக்களிக்கும் இயந்திரம் மற்றும் எண்ணற்ற கருவிகள். தனி ஒரு மனிதரின் 1093 கண்டுபிடிப்புகள் இன்னும் எவராலும் முறியடிக்கப்பட வில்லை.
- எண்ணற்ற தடைகளைத் தாண்டி உலகின் மின் விளக்கிற்குப் பயன்படுத்தக் கூடிய பொருத்தமான இழையைக் கண்டு பிடிப்பதற்கு ஆயிரம் சோதனைகளை செய்தார். அத்தனையிலும் தோல்விதான். மனம் தளராத எடிசன் சொன்ன பதில்... ‘இந்த ஆயிரம் வழிகளில் பொருத்தமில்லாத இழைதான் வரும் என்று இப்போது கண்டிபிடித்து விட்டேன்‘ என்பது தான் அவரது பொறுமையான பதில்.
- எண்ணற்ற தடைகளைத் தாண்டி உலகின் இரவுகளை பகலாக்க 1879 டிசம்பர் மாதம் 31- ம் தேதி மின்சாரத்தில் ஒளிரும் இழையை கண்டுபிடித்தார். தோல்விக்கான காரணமாக எடிசன் கூறுவது ‘எடுத்த செயலை முடிக்காமல் கைவிடும்போது வெற்றிக்கு எவ்வளவு அருகில் இருக்கிறோம் என்று பலருக்குத் தெரிவதில்லை. எனவே தோல்வியைத் தழுவுகிறார்கள்‘ என்கிறார். எடிசன் போல நீங்களும் திறமையோடும் விடா முயற்சியோடும், பொறுமையோடும் இருந்தால் ஒருபோதும் உங்களை யாராலும் தோற்கடிக்க முடியாது, ஜெயிப்பது நிஜம்!

## தன்னம்பிக்கையே வெற்றி...

- நான் கால்களைத்தான் இழந்துவிட்டேன் ஆனால் என்னிடம் உலகிலேயே விலை மதிக்கமுடியாத ஒரு கை உள்ளது. அதுதான் நம்பிக்(கை). அதைக் கொண்டு இந்த உலகின் உயரங்களை எல்லாம் என்னால் தொடமுடியும் என்ற உறுதியான மனிதரை உங்களுக்கு தெரியுமா? ஆந்திர மாநிலத்தின் ஒரு சிறு கிராமத்தில் ஏழ்மையான குடும்பத்தில் வாழ்ந்து கொண்டிருந்த நரேஷ்சை ஏழு வயதில் புரட்டிப்போட்டது அந்த சோகச் சம்பவம்.

➔ 1993 ஜனவரி 11ந் தேதி லாரி ஓட்டுபவருக்கு அருகில் அமர்ந்துசென்று கொண்டிருந்த அவர் விளையாட்டாக லாரி கதவின் கைப்பிடியை திருக, வெளியே தூக்கி எறியப்பட்டார். அந்த விபத்திற்கு பிறகு ஒரு வாரம் கழித்து அவரின் கால்கள் அகற்றப்பட்டன. அறுவை சிகிச்சை முடிந்து கண் விழித்தவுடன் அவர் அம்மாவிடம் கேட்ட முதல் கேள்வி, அம்மா, என் கால்கள் எங்கே? அவரைக் கட்டிக் கொண்டு அழுத அவர் அம்மா சொன்ன வார்த்தைகள் கவலைப்படாதே, கைகள் இருக்குப்பா'. அந்த வார்த்தைகள் தான் இன்னும் அவர் காதிலே நம்பிக்கையாக ஒலித்துக் கொண்டிருக்கின்றன.

➔ கால்களை இழந்தது தான் நரேஷின் வாழ்க்கையையே மாற்றிப் போட்டது. அதன் பின் அவர் மிகுந்த தன்னம்பிக்கை யோடும், துணிச்சலோடும் வாழ்க்கையை எதிர் கொண்டார். பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வில் பள்ளியிலேயே முதல் மாணவனாக 600க்கு 542 மதிப்பெண்கள் பெற்றார்.


➔ ஐ.ஐ.டி தேர்வெழுதி உடல் உனமுற்றோர் பிரிவில் இந்தியா விலேயே நான்காவதாக தேறி சென்னை ஐ.ஐ.டியில் சேர்ந்தார். இப்போது கணிப்பொறி துறையில் பிரபலமான கூகுள் தேடு பொறி நிறுவனத்தில் ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி துறையில் பணியாற்றுகிறார்.

➔ தன்னம்பிக்கை கொள்கிறவர்கள் தளர்ந்து போவதில்லை. தளர்ந்து போகிறவர்கள் தன்னம்பிக்கை கொள்வதில்லை என்பதற்கு உதாரணமாய் திகழும் நரேஷின் வார்த்தையில் சொல்ல வேண்டும் என்றால் 'சாதிக்க வேண்டுமென்று நீங்கள் உறுதியாக முடிவெடுத்துவிட்டால் போதும் உதவிகளும், சாதனைகளும் உங்களைத் தேடி வரும். இதற்கு இன்றைய உதாரணம் இந்த நரேஷ், நாளைய உதாரணம் நிச்சயம் நீங்கள்தான்'.

**மு. ஆதிகிருஷ்ணன்,**
மேலாண்மை இயக்குனர்,
யோசி மனிதவளப் பயிற்சி நிறுவனம்,
திருச்சி.



## தோல்வியை துறத்திடு!




ஒரு விறகு வெட்டியின் மகன் ஒரு நாட்டின் குடியரசு தலைவர் என்றால் நம்மால் நம்ப முடிகிறதா?


ஆம்! இது முற்றிலும் உண்மை. ஒரு சிறிய குக்கிராமத்தில் உண்ணும் உணவிற்க்கே வழியில்லாத குடும்பத்தில் பிறந்தவன் அந்த சிறுவன். அருகில் இருப்பவர்கள் உண்ணும் உணவைப் பார்த்து தினம் தினம் ஏங்கி தவித்தச் சிறுவன், தனக்கும் இந்த உணவு கிடைக்காதா என்று ஏங்கி அழுதாத நாட்களே இல்லை.


மற்றவர்கள் தன் குழந்தைகளை பள்ளிக்கு அனுப்பிய வேலையில் இவரது பெற்றோறோ ஒரு வேளை உணவிற்காக காட்டு வேலைக்கு அனுப்பி வைத்தார்கள். மற்ற குழந்தை சிலேட்டில் எழுதிப் படித்தபோது இந்த சிறுவனோ மண்வெட்டியில் எழுதி படித்தான்.

இவனுடைய ஆசையைப் பார்த்தவர்கள் அங்குள்ள அரசு பள்ளியில் சேர்த்தனர். தொடக்ககல்வி கற்கும் பொழுதே மற்றவர்கள் தொட முடியாது என்று சொல்லும் தூரத்தை தொட்டு விடுவேன் என சூளுரைத்தான். அவன் தூரத்தைத் தொட பலமுறை முயற்சி செய்தும் தோல்வி அவனை விடவில்லை. எத்தனை முறை தோற்றாலும் ஒரு முறை ஜெயிப்பேன் என்ற நம்பிக்கையோடு அவன் கண்ட தோல்வி கள்.. 22-வயதில் வியாபாரத்திலும், 23-வயதில் சட்டசபை தேர்தலிலும், 24-வயதில் மறுபடியும் வியாபாரத்திலும், 25-வயதில் சட்டசபையிலும், 26-வயதில் மனைவி மரணத்திலும், 27-வயதில் நரம்புத்தளர்ச்சி நோயிலும், 29-வயதில் சபாநாயகர் தேர்தலில் தோல்வியிலும், 31-வயதில் சட்டசபையில் தோல்வியிலும், 34-வயதில் சட்டசபை தேர்தலில் தோல்வியிலும், 39-வயதில் மீண்டும் சட்டசபை தேர்தலில் தோல்வியிலும், 46-வயதில் மேல்சபை தேர்தலில் தோல்வியிலும், 47-வயதில் துணை ஜனாதிபதி தேர்தலில் தோல்வி. இப்படி பல முறை தோல்வி அடைந்த இவர் தன்னுடைய 49-வது வயதில் மேல்சபை தேர்தலிலும் தன்னுடைய 51-வயதில் அமெரிக்க ஜனாதிபதியாக தேர்வு பெற்று, ஒரு சிறிய கிராமத்தில் பிறந்த எவராலும் அடைய முடியாது என்று சொன்னதற்கு மாறாக, அமெரிக்காவின் செனட் உறுப்பினராகி அமெரிக்காவின் அரசு சட்டத்தையோ மாற்றி அமைத்த ஆப்ரகாம் லிங்கன் தான் அந்த சிறுவன். இவருக்கு இருந்த விடாமுயற்சியும் தோல்வியைக் கண்டு துவண்டுவிடாதா மனநிலையும், உயர்ந்த எண்ணமும் நமக்கு இருந்தால் எட்டா தூரத்தையும் எட்டி விடுவோம்.


இலக்கு அமைத்தல்
இலக்கு
ஆன்றோர் கூற்று
திட்டமிடல்
தொலை நோக்கு
இலக்கு அமைத்தலின் பலன்கள்
இலக்கு நெறி பயிற்சி
இலக்கு நெறி அட்டவணை
இலக்கிற்கான குணாதிசயங்கள்
வரையறுக்கப்பட்ட
அளவிடக்கூடிய
அடையக்கூடிய
யதார்த்தமான
கால அளவுடைய
S
M
A
R
T
இலக்குகளின் வகைகள்
கண்ணுக்குத் தெரிகின்ற
கண்ணுக்குத் தெரியாத
திணிக்கப்படுகின்ற
பல்வேறு காலகட்ட இலக்குகள்
குறுகிய கால
நடுத்தர
நீண்ட கால




திறன்மிகு தொடர்பாற்றல்
தொடர்பாற்றல்
தொடர்பாற்றல் வளையம்
ஆன்றோர்கள் கூற்று
யாரிடம் ?
தொடர்பாற்றல் நட்சத்திரம்
என்ன ?
எப்பொழுது ?
எங்கே ?
எப்படி ?
எதற்கு ?
அகத்தொடர்பாற்றல்
சூளுரைத்தல்
மனக்கண்ணில் படக்காட்சி
தியானித்தல்
புறத்தொடர்பாற்றல்
வார்த்தைகளால் ஆன
எழுத்து
சொல்
வார்த்தைகளல்லாத
அங்கமொழி
தொடர்பாற்றல் தடைகள்
சொற்பொருள் சார்ந்த
உளவியல் சார்ந்த
நிறுவனம் சார்ந்த
தொடர்பாற்றல் வழிகள்
மரபு சார்ந்த
மேலிருந்து கீழ்
கீழிருந்து மேல்
பக்கவாட்டில்
மரபு சாராத
வதந்தி





Thanks
to
Nikil Foundation

